05.06.2025 OS.No.47/2015 PW1 Name :.**கம்சலா**

15, 16 **பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. ஏற்கனவே 15, 16 பிரதிவாதிகள் அ.வ.எண். 65/2015, அ.வ.எண்.12/2017 இரண்டு வழக்குகளை தாக்கல் செய்த பின்னர் தான் இந்த வழக்கை போட்டுள்ளேன். லட்சுமணன் என்னுடைய கணவர். அவருக்காக சேர்த்து நான் சாட்சி கூறுகிறேன். வழக்கு சொத்து என்னுடைய மாமனார், மாமியருடையது ஆகும். அவர்கள் பெயரில் ஆவணம் உள்ளது அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். 3 ஆவணங்கள் போட்டுள்ளேன்.
2. வழக்கு சொத்தில் பகுதி சொத்துகள் குறித்து 15, 16 பிரதிவாதிகள் பெயரில் கிரைய ஆவணங்கள் ஏற்பட்டுள்ளதை நான் சரிபார்க்கவில்லை. மீதி சொத்துகள் குறித்து அவர்கள் பெயரில் விக்கிரைய ஒப்பந்தம் பதிவாகி உள்ளது என்றால் அவ்வாறு இல்லை. 15, 16 பிரதிவாதிகள் பெயரில் பாலகிருஷ்ணன் என்பவர் பத்திரம் எழுதிகொடுத்துள்ளார் என்றால் இல்லை. சுமார் 2, 3 வாரங்களுக்கு முன் வழக்கில் உள்ள 4ம் பிரதிவாதி மீனாட்சி இறந்துவிட்டார். பாக வழக்கில் அவரின் வாரிசுகளை சேர்க்க நடவடிக்கை எடுத்துள்ளேன்.
3. குப்பம்மாள் என்னுடைய மாமியார். பூங்காவனம் என்னுடைய மாமனார். வழக்கு சொத்திற்கு என்னுடைய மாமனார் மாமியார் பெயரில் எத்தனை பத்திரங்கள் உள்ளது என்பது எனக்கு தெரியாது. அவர்கள் சுயமாக சம்பாத்திய சொத்துகள் ஆகும். அவைகள் தான் வாசாஆ 1 முதல் வாசாஆ 4 ஆகும். வாசாஆ 5 ஆவணம் என்னுடைய மாமனார் மற்றும் மாமியார் பாலகிருஷ்ணன் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளது ஆகும். அதை

அடிப்படையாக வைத்து வாசாஆ7 ஆவணம் ஏற்பட்டுள்ளது.

4. அதே தேதியில் தான் மீதி சொத்து குறித்து ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அதை வாசாஆ 8 ஆக தாக்கல் செய்துள்ளேன். அதற்காக தான் 15, 16 பிரதிவாதிகள் தனிதனியாக வழக்கு போட்டுள்ளார்கள். 15, 16 பிரதிவாதிகள் பெயரில் உள்ள கிரைய ஆவணங்கள் செல்லாது என வழக்கில் பரிகாரம் கேட்டுள்ளேன். பாலகிருஷ்ணன் பாண்டியனுக்கு சொத்து கிரையம் கொடுத்துள்ளார் அதை வாசாஆ 9 ஆக போட்டுள்ளேன். பாலகிருஷ்ணன் இளங்கோவிற்கு கிரையம் கொடுத்ததை வாசாஆ10 ஆக போட்டுள்ளேன். கொடிமலர் என்பவருக்கு கிரையம் கொடுத்தது தான் வாசாஆ 11 ஆகும்.

5. பாலகிருஷ்ணன் வெங்கடாசலம் இடம் கிரையம் கொடுத்த சொத்து தான் வாசாஆ12 ஆகும். வாசாஆ12 சொத்தை பாலகிருஷ்ணன் 15, 16 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் இல்லை. பாலகிருஷ்ணனுக்கு திருமணம் ஆகவில்லை. பாலகிருஷ்ணன் இறப்பதற்கு முன் அவரது தாயார் இறந்துவிட்டார். தாவா சொத்துகளை கூட்டாக அனுபவிப்பதற்கு ஆவணம் போட்டுள்ளேன். கூட்டு பட்டா, நிலவரி ரசீது போட்டுள்ளேன். அவ்வாறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 15, 16 பிரதிவாதிகள் பெயரில் சொத்திற்கான பட்டா மாறியுள்ளது என்றால் அவ்வாறு இல்லை. மற்ற இரண்டு வழக்குகளில் 15, 16 பிரதிவாதிகள் என்ன ஆவணங்கள் போட்டுள்ளார்கள் என்று தெரியாது.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 05/06/2025 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2025.06.05 17:42:54 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.